This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# அதிர்ச்சி ! அதிர்ச்சி !

**ஒரே நாள்! இருபத்து நாலு மணி நேரம்! எடுத்த பணத்தைத் திருப்பி விடலாம்! அப்படித்தான் எண்ணினான் ராகவன். ஆனால் அதற்குள் எத்தனை விபரீதங்கள் நடந்து விட்டன!**

*அறையில் மங்கலான வெளிச்சம். அதன் நடுவில் ஒரு கட்டில். அந்தக் கட்டிலில் அவள் படுத்திருக்கிறாள். படுத்திருக்கிறாள் என்பது தப்பு. மார்பில் கத்தியால் குத்தப்பட்டு துவண்டு கிடக்கிறாள். அருகில் அவள் கணவன் குனிந்த தலையுடன் வாயைக் கைக்குட்டையால் மூடிக் கொண்டு சோக உருவமாக நிற்கிறான். போலீஸ் இன்ஸ்பெக்டர் கையிலுள்ள நோட்டுப் புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறார். போலீஸ் புகைப்படக்காரர் தன் உதவியாளருடன் எதிர்ச் சுவரில் பதிந்திருக்கும் விரல் அடையாளங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறார். இடது ஓரத்தில்–*

ராகவனுக்கு மிக அவசரமாக 180 ரூபாய் பணம் தேவையாயிருந்தது. மிக மிக அவசரம்! இதோ நாளைக்கே ஊரிலிருந்து. தம்பியிடமிருந்து மணியார்டர் வந்துவிடும். இன்றைக்கு சாயங்காலம் எடுத்து நாளைக் காலை திரும்ப வைத்து விடலாம். இதில் என்ன? முன்னே போட்டுப் பின்னே புரட்டுகிற சமாசாரம்.

இந்த நம்பிக்கையில் ஆபீஸ் பணம் ரூபாய் நூற்றெண்பதை எடுத்து அந்த நீல நிறப்புடவையை வாங்கி விட்டான்! பளபளக்கும் அதன் அழகில் மயங்கி, அவன் மனைவி மோகனமாய்ச் சிரித்தபோது நூற்றெண்பது என்ன, ஆயிரத்தெண்ணூறு ரூபாய் கூடக் கையாடலாமே என்று தோன்றியது!

மாலை, இருவரும் சினிமாவுக்குப் போனபோது எதிரே வந்த ஸர்தார்ஜியைப் பார்த்தும் சுரீரென்றது ராகவனுக்கு.

ஸர்தார்ஜி.......குருநானக்... குருநானக்கின் பிறந்த தினம்.... நாளைக்குத் தபால் ஆபீஸ் விடுமுறை...!

நாளைக்கு மணியார்டர் வராது! ஆபீஸ் கையாடிய பணத்தைத் திரும்ப வைக்க முடியாது! ஐயையோ!

சினிமாவில் மனம் எப்படிச் செல்லும் ராகவனுக்கு?

எதிரே விசாலமான திரையில், அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டதையும், சிறையிலே அடைப்பதையும் படமாகக் காட்டுவது போலிருந்தது! நகத்தைக் கடித்துக் கொண்டான்.

மனைவி, “ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?” என்றாள். ராகவன் பதில் பேசவில்லை.

இடைவேளையின்போது குளிர்பானம் குடித்ததும் சற்று அமைதி ஏற்பட்டது. சாதாரணமாக, ஆபீசில் இருபதாம் தேதிக்குப் பிறகு திடீர்ச் செலவுகள் வருவது கிடையாது. மானேஜர் பணம் ஏதும் கேட்க மாட்டார். இன்றைக்கு தேதி